**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குன்னூர்**

**OS.No. 97/2015 DW –1 நாள்– 13.10.2025.**
**பெயா்: ராம்சுந்தர்**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

**<u>வாதி மற்றும் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.</u>**

**சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

**9.** நான் இவ்வழக்கில் எனது முதல் விசாரணையை தாக்கல் செய்த பின்புதான் நீதிமன்ற ஆணையரை நியமிக்க கோரி விண்ணப்பித்தேன் என்றால் சரிதான். நான் நீதிமன்ற ஆணையரை நியமித்த பின்பு அவர் தாக்கல் செய்த அறிவிப்பை பார்த்து சரியென்று ஒப்புக்கொண்டபின்பு தான் அவர் நீதிமன்றத்தில் அறிக்கையை தாக்கல் செய்தார் என்றால் சரிதான்.

**10.** நான் முதல் பிரதிவாதியிடமிருந்து கிரையம் பெறும்போது சர்வேயரை வைத்து அளந்து அதற்கு பின்புதான் கிரையம் கொடுத்தார் என்றால் சரிதான். முதல் பிரதிவாதியிடமிருந்து நான் கிரையம் பெறும்போது அதற்குண்டான ஆவணங்களை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன்.

**11.** 1949 ல் ஆவண எண். 777/1949 ல் சவரிமுத்து என்பவரிடமிருந்து மதலை முத்து கிரையம் பெற்றிருக்கிறார் அதில் அவருக்கு 1–1/2 சென்ட் மட்டுமே பாத்தியப்பட்ட நிலையில் முதல் பிரதிவாதி 2 சென்ட் என்று தவறாக ஆவணத்தை ஏற்படுத்தி கிரையம் கொடுத்திருக்கிறார் என்றால் சரியல்ல.

**12.** சர்வே எண்ணை தவறாக தான செண்டில்மண்டில் குறிப்பிட்டுள்ளதாக கூறி அதனை சரிசெய்ய ரெக்டிபிகேஷன் ஆவணம் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்சொன்ன அனைத்து விவரங்களும் தெரியும் அதனை தெரிந்துகொண்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**13.** 4 மற்றும் 5ம் பிரதிவாதிகள் எனது மகன் மற்றும் மகள் ஆவார்கள். நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கையை நான் ஏற்றுகொள்கிறேனா என்றால் ஏற்றுக்கொள்கிறேன். அந்த அறிக்கையில் இறுதியாக என்ன கூறினார் என்ற விவரம் எனது வழக்கறிஞருக்கு தான் தெரியும்.

**14.** 4ம் பிரதிவாதியை வைத்து தற்போது கேவியட் மனு ஒன்று தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். மேற்சொன்ன மனு வாதியின் மீது தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். நான் முறையற்ற முறையில் சொத்தை கிரையம் பெற்று அதில் எனக்கு நடைபாதை இருந்தும் வாதியை தொந்தரவு செய்யவேண்டுமென்ற நோக்கத்தோடு அந்த பாதையை பயன்படுத்திவருகிறேன் என்றால் சரியல்ல.

**15.** பிழைத்திருத்த பத்திரத்தின் வழியாக கதவு எண் மற்றும் சர்வே எண்களை திருத்தியுள்ள நிலையில் அதை சரிபார்க்காமல் நான் கிரையம் பெற்றிருக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி வழக்கு சொத்தான நடைபாதையை எனக்கு உரிமை இல்லை என்றும் வேறு வழியை தான் நான் நடைபாதையாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் கூறுவது சரியல்ல.

**16.** எதிர்காலத்திலும் இவ்வழக்கு சொத்தை பொறுத்து எந்த தொந்தரவும் வரக்கூடாது என்பதற்காக இவ்வழக்கு தாக்கல்

செய்யப்பட்டிருக்கிறது என்றாலும் அதனால் இவ்வழக்கு தாவாப்படி தீர்ப்பாக வேண்டுமென்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

R HIMAKRITI

Digitally signed by R HIMAKRITI
Date: 2025.10.13 16:51:25 +0530